தமிழ்நாட்டில் இல்லை மின்வெட்டு என்ற அளவுக்கு ஒரே சீரான uninterrupted quality power supply செய்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். யாராவது உங்களிடம் மின்சாரம் இல்லை என்று application கொடுத்து அதில் pending இருந்தால் நீங்கள் என்னிடம் சொல்லுங்கள். அருகில் இருக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி உங்களுக்கு எவ்வளவு load power வழங்க வேண்டுமென்றாலும் நிச்சயமாக upload செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***1243—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 58–வது வட்டம், நேவல் மருத்துவமனை சாலையிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நேவல் மருத்துவமனை சாலையில் செயல்பட்டு வந்த அமுதம் நியாய விலை அங்காடிக் கட்டடம் பழுதடைந்ததால் பாதுகாப்பு கருதி 22–8–2016 அன்று லால்குட்டி தெருவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இப்பகுதியில் உள்ள புதிய நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எனவே, மேற்படி நியாய விலைக்

2019 ஜூலை 8]

கடைக்குப் புதிய கட்டடம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 58–வது வார்டில் ஏ.ஏ. 031, எம்.ஏ. 029 என்ற இரண்டு அமுதம் நியாய விலைக் கடைகள் ஏறக்குறைய 18 அடி அகலமுள்ள மிகவும் குறுகலான சாலையில் ஒன்றாக ஒரே கட்டடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டடத்தில் பில் போடக்கூடிய* POS machine *கூட வேலை செய்யவில்லை.* Bill *போடும்போது அந்த பில் போடுபவர் ரோட்டில் வந்து நின்றுகொண்டு பில் போடுகிறார். இதை இரண்டு வருடங்களுக்கு முன்பே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் அழைத்துச் சென்று காண்பித்தோம். ஏறக்குறைய 40 அடி அகலம் கொண்ட* Stringer *சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் காலியாக இருக்கின்றது. அதையும் அதிகாரிகளை நேரடியாக அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறேன். தாங்கள் நேரடியாக அந்த இடத்தை ஆய்வு செய்து, கூடிய விரைவில் அந்த இரண்டு கடைகளையும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல்* Stringer *சாலையில் அமைத்துத் தருவீர்களா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இரண்டு கடைகள் ஒரே இடத்தில் செயல்படுவதால் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது, நெரிசல் அதிகமாக இருக்கிறது என்பதனை என்னிடத்தில் இதற்கு முன்பே சொல்லியிருக்கிறார்கள். நான் அதிகாரிகளிடத்தில் சொல்லி ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறேன். அந்த ஆய்வின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்*

அவர்கள் சொன்ன Stringer சாலையில் ஒரு நியாய விலைக் கடையை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104–வது வார்டு, புள்ளாபுரத்தில் ஏறக்குறைய 1,700 குடும்ப அட்டைகள் உள்ளன. அதற்கு 1 கி.மீ. தூரத்தில் இருக்கக்கூடிய சாஸ்திரி நகரில் 850 குடும்ப அட்டைகள் உள்ளன.* DA–*045 என்ற அமுதம் நியாய விலைக் கடையில் ஏறக்குறைய 750–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள், சாஸ்திரி நகரிலிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலையைக் கடந்து சென்று, புள்ளாபுரத்தில் உள்ள நியாய விலைக் கடையிலிருந்து உணவுப் பொருட்களை வாங்க நேரிடுகிறது. சாஸ்திரி நகரில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அதையும் அதிகாரிகளை நேரில் அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

அதேபோல், 107–வது வட்டத்தில், புதிய பூபதி நகர், வி. பி. சிங் நகர், ஓசான்குளம் போன்ற இடங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளில் வசிக்கக்கூடிய சுமார் 550 குடும்ப அட்டைதாரர்கள் சேத்துப்பட்டு Railway level crossing–*ஐ தாண்டிச் சென்று, சேத்துப்பட்டு* School Road–*ல் இருக்கக்கூடிய 046 என்ற நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புதிய பூபதி நகருக்கு அருகில் இருக்கக்கூடிய மெக் நிகல்ஸ் ரோடில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ரேஷன் கடைகளை அமைத்துக் கொடுத்தால், அங்கிருக்கக்கூடிய வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள், சேத்துப்பட்டு* railway crossing–*ல்* railway track–*ஐ கடந்து சென்று பொருட்களை வாங்க வேண்டிய நிலை இருக்காது. ஏனெனில், அவ்வாறு* railway track–*ஐ கடந்து சென்று பொருட்களை வாங்கி வரும்போது ஓர் அம்மையார் இரயிலில் அடிபட்டு இறந்துவிட்ட துரதிர்ஷ்டமான சம்பவம்கூட நடைபெற்றிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்*

புதிய பூபதி நகர், ஓசான்குளம், வி.பி. சிங் நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 600 குடும்ப அட்டைதாரர்களுக்காக மெக் நிகல்ஸ் சாலையில் ஒரு புதிய ரேஷன் கடையை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர் சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய கடைகளையெல்லாம் முறைப்படுத்தி, அவரவர் பகுதிகளில் அவரவர்கள் பொருட்களை எளிதாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதனடிப்படையில், நிதி ஒதுக்கப்பட்டு, புதிய கட்டடங்களெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, அதிகமான மக்கள் நெருக்கடி இருக்கக்கூடிய இடங்களில் நியாய விலைக் கடைகளைத் தனித் தனியாகப் பிரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். சாஸ்திரி நகர் உள்ளிட்ட பகுதிகளில் இருக்கக்கூடிய கடைகள் பற்றிய கோரிக்கையையும், மக்கள் railway level crossing–ஐக் கடந்து சென்று பொருட்களை வாங்குவதற்கு சிரமமாக இருக்கிறது என்ற கோரிக்கையையும் பற்றி ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், நெய்தலூர் ஊராட்சியில் உள்ள சின்னகவுண்டன்பட்டி, கட்டாணிமேடு, சின்னப்பனியூர் ஆகிய பகுதிகளில் நியாய விலைக் கடைகள் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்பட்டு, அதனடிப்படையில் அக்கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

54—

கால்நடை மருத்துவமனை

***12759—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, கழுதூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழுதூர் கிராமத்தில் அரசின் கொள்கைப்படி நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க இயலாது. ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்குமேல் இருந்தால்தான் கால்நடைக் கிளை நிலையம் ஆரம்பிக்க முடியும். பின்பு, கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 5,000–க்குமேல் இருந்தால், அந்தக் கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்தப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கழுதூர் கிராமத்தில் கால்நடைக்